

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின்பிறந்தநாளை முன்னிட்டு புதுக்கோட்டை மாவட்டம் அன்னவாசல் ஒன்றியம் இலுப்பூர் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மருத்துவ அணி சார்பில் நடைபெற்ற மாபெரும் மருத்துவ முகாமை புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்ல பாண்டியன் தலைமையில் விராலிமலை சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளரும் தஞ்சாவூர் துணை மேயர் அஞ்சுகம் பூபதி ஒருங்கிணைப்பில் வடக்கு மாவட்ட மருத்துவஅணி அமைப்பாளர் டாக்டர் மு.க.முத்துக்கருப்பன் ஏற்பாட்டில் தொடங்கி வைத்தனர். நிகழ்வில் கே.எஸ்.சந்திரன், தென்னலூர் எம்.பழனியப்பன், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, கோவிந்தராஜன், வை.விஜயகுமார், இ.செந்தில்ராஜா, டாக்டர் கே.என்.அமானுல்லா, டாக்டர் தவ.பா.உதயச்சூரியன், டாக்டர் சுகுந்தன், சாங்கிராப்பட்டி ரவி மற்றும் மருத்துவர்கள், கழக நிர்வாகிகள் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு பரிசோதனை செய்து கொண்டனர்.




கழக இளைஞரணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48 வது பிறந்த நாளை முன்னிட்டு ஈரோடு வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் கோபி குள்ளம்பாளையம் அருகே நடைபெற்ற கபடி போட்டியில் வெற்றி பெற்ற அணியினருக்கு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி பரிசுகள் வழங்கினார். நிகழ்வில் வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம், சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் ஏ.ஜி.வெங்கடாஜலம், ஈரோடு கிழக்கு வி.சி.சந்திரகுமார், கோபி நகர்மன்ற தலைவர் என்.ஆர்.நாகராஜ், டி.என்.பாளையம் ஒன்றிய கழக செயலாளர் எம்.சிவபாலன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### உதகை சாம்ராஜ் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற

# நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு முகாம்!

## அரசு தலைமை கொறடா க.ராமச்சந்திரன் ஆய்வு!

உதகை, டிச. 3 -

நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்புமுகாம்” முதலமைச்சர் அவர்களால் ஆகஸ்டு 2ஆம் தேதி சென்னை மற்றும் தமிழகமெங்கும் துவக்கி வைக்கப்பட்டது. தமிழகம் முழுவதும் 1256 முகாம்கள் நடத்தப்பட உள்ளது. இதனை தொடர்ந்து நீலகிரி மாவட்டத்தில் ஆகஸ்ட் 2ஆம் தேதி “நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்புமுகாம்” நடைபெற்றது.

நீலகிரி மாவட்டத்தில் இதுவரை 11 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது. மேலும் 12வது முகாமானது உதகை வட்டாரத்திற்குட்பட்ட ராக்லேண்ட், சாம்ராஜ் எஸ்டேட், சாம்ராஜ் மேல்நிலைப்பள்ளியில் நலம் காக்கும் ஸ்டாலின் முகாம் நடைபெற்றது.

இம்முகாமினை அரசு தலைமை கொறடா கா. ராமச்சந்திரன் மற்றும் நீலகிரி மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜு ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். இம்மருத்துவ முகாமில் பல்வேறு வகை சிறப்பு மருத்துவ சேவைகளான, புற்றுநோய் கண்டறியும் பரிசோதனைகள், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீடுஅட்டை வழங்குதல், அமைப்புச்சாரா தொழிலாளர்களுக்கான அடையாள அட்டை வழங்குதல், இரத்தப்பரிசோதனை, இ.சி.ஜி., எக்கோ, எக்ஸ்ரே, அல்ட்ரா சோனோகிராம் ஸ்கேன், சளிபரிசோதனை, சிறுநீர் பரிசோதனை மற்றும் மார்பகப் புற்றுநோய் உள்ளிட்ட அனைத்து பரிசோதனை முடிவுகளை உள்ளடக்கிய மருத்துவக் கோப்புகளும் உடனுக்குடன் பெறப்படுமாறு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இம்முகாமில் அரசு தலைமை கொறடா ராமச்சந்திரன் பேசும்பொழுது பொதுமருத்துவம், பொது அறுவை சிகிச்சை, எலும்பு முறிவு. மகப்பேறுமருத்துவம், காது, மூக்கு, தொண்டை, மனநலம், இயன்முறை மருத்துவம், ரேடியாலஜி, நுரையீரல் நோய் சிகிச்சை, நீரிழிவு நோய் சிகிச்சை, சித்தா மற்றும் ஆயுர்வேதம் ஆகிய சிகிச்சைகள் அளிக்கப்படுகிறது.

மேலும் மேல்சிகிச்சை தேவைப்படும் நோயாளிகளுக்கு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்து சிறப்பு சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இம்மருத்துவ முகாமிற்கு பல்வேறு சிறப்பு மருத்துவ நிபுணர்கள் வருகைதந்து சிறப்பு மருத்துவச்சேவைகள் அளிக்கப்படுகிறது. பொதுமக்கள் அனைவரும் இம்முகாமில் கலந்து கொண்டு பயன்படுத்திக் கொள்ளுமாறுகூறினார்.

உடன் மாவட்ட சுகாதார பணிகள் துணை இயக்குனர் மரு.சோமசுந்தரம், உதகை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை மருத்துவர் மரு.ரவிசங்கர். வட்டார மருத்துவ அதிகாரி மரு.முருகேசன் மற்றும் மாவட்டக் கழக அவைத்தலைவர் போஜன், உதகை தெற்கு ஒன்றிய (கிழக்கு) செயலாளர் பரமசிவன் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!

# அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தின வாழ்த்துகள்!

## கழக மாற்றுத்திறனாளிகள் அணி மாநில தலைவர் ரெ.தங்கம் அறிக்கை!

சென்னை, டிச. 3 –

தி.மு.க. மாற்றத்திறனாளிகள் அணி மாநில தலைவர் ரெ.தங்கம் அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தினத்தையொட்டி வாழ்த்து செய்தி வெளியிட்டுள்ளார்.

அவரது வாழ்த்து செய்தி வருமாறு.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பொற்கால ஆட்சியில் ஊனம் என்ற சொல்லை நீக்கி மாற்றுத்திறனாளிகள் என பெயர் சூட்டியும், அவர்களுக்கென தனித்துறையைக் கண்டு, தனி நல வாரியம் அமைத்தும், அத்துறையை தனது நேரடி கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு வரலாற்று சிறப்புமிக்க திட்டங்களை வாரி வழங்கி மாற்றுத்திறனாளிகளின் இதயங்களில் இன்றும் நீங்க அகல் விளக்காக வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்பதை லட்சக்கணக்கான மாற்றுத்திறனாளிகள் இன்றும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களை நன்றி உணர்வுடன் வணங்கி போற்றுகிறோம்.

அவரது வழியில் திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் எங்கள் துறை அமைச்சரும், தமிழ்நாடு முதலமைச்சர் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற நான்கரை ஆண்டு காலத்தில் மாற்றுத்திறனாளிகளின் வாழ்வு மலர பல்வேறு வரலாற்று சிறப்புமிக்க திட்டங்களான தாயுமானவர் திட்டத்தின் மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கு இல்லம் தேடி ரேஷன் பொருட்கள் வழங்குதல், நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் வீடு ஒதுக்கீடு செய்வதில் முன்னுரிமை,

ஒருகால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கும் விலையில்லா இணைப்புச் சக்கர ஸ்கூட்டி, அதிநவீன சக்கர நாற்காலி வழங்குதல்,

தன்னார்வத் தொண்டும் மூலம் நடத்தப்படும் சிறப்பு பள்ளிகளில் தங்கிப் பயிலும் மாற்றுத்திறனாளிகள் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி, மதிய உணவு திட்டம், கடும் மாற்றத்திறனாளிகளுக்கு மாதந்தோறும் பராமரிப்பு உதவித்தொகை ரூ.2000/ மற்றும் ரூ. 1500/ உயர்த்தி வழங்குதல், மாற்றுத்திறனாளிகள் நலவாரியத்தின் மூலம் சமூக நல பாதுகாப்பு திட்டத்தின் கீழ் வழங்கப்படும் விபத்து இறப்பு தொகை இரு மடங்கு உயர்த்தி வழங்கி ரூ. 1 லட்சத்திலிருந்து 2 லட்சமாக உயர்த்தி வழங்குதல்,

கல்வி உதவித்தொகை இரண்டு மடங்கு உயர்த்தி வழங்குதல், சிறப்பு பள்ளியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு உணவுக்கான தொகை ரூ. 1200/ இருந்து ரூ.1400/ உயர்த்தி வழங்குதல், அரசுத் துறையில் பணியாற்றும் 50 வயதுக்கு மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் பதவி உயர்வு பெற டினன்பிஎஸ்சி நடத்தும் துறைத் தேர்வி ருந்து விலக்கு, மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளுக்கு உட்பட்ட சாலைகளில் மாற்றுத்திறனாளிகள் கடை வைத்து வாழ்வாதாரத்தை காக்க அரசாணை வெளியிட்டது, மாற்றுத்திறனாளிகளின் நீண்ட நாள் கனவான, சென்னை மெரினா கடற்கரை, பெசன்ட் நகர் கடற்கரைகளில் மாற்றுத்திறனாளிகள் கடல் நீரில் தங்களின் பாதங்களை பதித்து மகிழ்வூட்ட சிறப்பு நடை பாதை அமைத்தல் போன்ற சிறப்புமிக்க திட்டங்களை தொடர்ந்து அறிவித்து செயல்படுத்தி வருவதுடன்,

”இந்திய வரலாற்றிலேயே முதன் முறையாக தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகளை நியமன உறு ப்பினர்களாக நியமித்திட ஆணை பிறப்பித்ததுடன் அதனை உடனடியாக நிறைவேற்றும் விதமாக நகராட்சி, மாநகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் மாற்றுத்திறனாளி களை, நியமன உறுப்பினர்களாக நியமித்து, மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளை நிலைநாட்டி,

வரலாற்றில் இடம்பெற்ற தமிழ்நாடு முதலமைச்சர், வாழும் கலைஞர், தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களையும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களையும், அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தினத்தில், திமுக மாற்றுத் திறனாளிகள் அணியின் சார்பாகவும், அனைத்து மாற்றுத்திற னாளிகள் சங்கங்களின் சார்பாகவும் நன்றியையும், பாராட்டுக்களை யும் தெரிவித்து வணங்கி மகிழ்கின்றேன்.

மேலும், உலகெங்கும் வாழும் மாற்றுத்திறனாளிகள் தங்களுக்கான உரிமைகளையும் பாதுகாத்து, பல்லாண்டு காலம் வாழ, இந்நாளில் தமிழ்நாடு முதலமைச்சர் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிநின்று வாழ்த்துகின்றேன்.

இவ்வாறு, திமுக மாற்றுத்திறனாளிகள் அணியின் மாநிலத் தலைவர் ரெ.தங்கம் தனது வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.



சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டாரம், வேலாசாமி செட்டியார் மேல்நிலைப்பள்ளியில் 29.11.2025 அன்று நடைபெற்ற ”நலம் காக்கும் ஸ்டாலின் மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமினை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

### கிழக்கு மாநகர பொன்மலை பகுதி கழகத்தின் சார்பாக

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டங்கள்!

## அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி – பேராசிரியர் சுப.வீரபாண்டியன் சிறப்புரை!

திருச்சி, டிச. 3 -

DCM 48 என்ற தலைப்பில் தமிழக துணை முதல்வர் - கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48வது பிறந்த நாளை முன்னிட்டு திருச்சி தெற்கு மாவட்டம் முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றது.

அதன் ஒரு பகுதியாக திருச்சி தெற்கு மாவட்டம் திருச்சி கிழக்கு மாநகரத்திற்குட்பட்ட பொன்மலை பகுதி கழகத்தின் சார்பாக பொன்மலை கீழக்கல் கண்டார்கோட்டை பகுதியில் தனியார் திருமண மண்டபத்தில் #DCM07 கழக இளை ஞரணிச் செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் பொது க்கூட்டம் !

வரவேற்புரை 44வது வட்டக் கழகச் செயலாளர் சுப்பிரமணியன்,



பகுதி கழகச் செயலாளர் இ. எம். தர்மராஜ் தலைமை, சிறப்புரை

திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் மாண்புமிகு அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் பேராசிரியர் தி சுப.வீரபாண்டியன் சிறப்புரையாற்றினார்.

இதில் மாநகரக் கழகச் செயலாளர் மண்டல குழு தலைவர் மு. மதிவாணன், தலைமை கழக பேச்சாளர் மணப்பாறை துரை. காசிநாதன், இறுதியாக நன்றியுரை வட்டக் கழகச் செயலாளர் தமிழ்மணி ஆற்றினார் . பொதுக்கூட்டத்தில் கழக வட்டக் கழக செயலாளர் முருகானந்தம், தமிழ்மணி, பரமசிவம், முருகன், நாகவேணி மாரிமுத்து, மனோகர், மரிய அடைக்கலம், வரதராஜன், மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மாவட்ட மாநகரக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



நீலகிரி மாவட்டம் குன்னூர் சட்டமன்ற தொகுதி கோத்தகிரி நகராட்சி கேர்பட்டா பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூபாய் 10.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட பல்நோக்கு கட்டிடத்தை அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் பொதுமக்களின் பயன்பாட்டுக்கு திறந்து வைத்தார். உடன் நீலகிரி மாவட்டக் கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜு, அவைத்தலைவர் போஜன், செந்தில், நெல்லை கண்ணன், திருமதி.ஜெயகுமாரி, உமாநாத் உட்பட கழக நிர்வாகிகள் மற்றும் ஊர் பொது மக்கள் உடனிருந்தனர்.




மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோயில் ஒன்றியம் வடகரையில் கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி பிறந்தநாளை முன்னிட்டு பொதுக்குழு உறுப்பினர் ஹர்ஷத் ஏற்பாட்டில் 10 மற்றும் 12ம் வகுப்பில் முதல் மூன்று இடங்களை பெற்ற பள்ளி மாணவ, மாணவிகளுக்கு பரிசு வழங்கல் மற்றும் ஏழை எளியவர்களுக்கு நலத்திட்ட உதவி வழங்கும் நிகழ்ச்சியில் மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் கலந்து கொண்டு பள்ளி மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கினார்.உடன் பொதுக்குழு உறுப்பினர் ஹர்ஷத் மற்றும் ஒன்றிய கிளைக் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



திருவாரூர் மாவட்டம் கோட்டூர் மற்றும் முத்துப்பேட்டை ஒன்றியப்பகுதிகளில் மழை வெள்ளம் பாதித்த விவசாய நிலங்களை தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, மாவட்டச் செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தாட்கோதலைவர் நா.இளையராஜா ஆகியோர் பார்வையிட்டு விவசாயிகளுக்கு ஆறுதல் கூறியதோடு மேல்நடவடிக்கைகளுக்கு அதிகாரிகளிடம் ஆலோசனை கூறினார். மாவட்ட ஆட்சித் தலைவர் மோகனசந்திரன் , மாரிமுத்து எம்.எல்.ஏ. மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் மருத்துவர் அழகு.ராஜா ஒன்றிய செயலாளர்கள் பால.ஞானவேல், இரா. மனோகரன், கே.வி.கே.ஆனந்த், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் க.அன்பழகன், பொறியாளர் அணி அமைப்பாளர் பிரபாகரன் மற்றும் அரசு அதிகாரிகள் உடன் இருந்தனர்.



சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் எம்.பி., ஆலோசனைப்படி கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஆத்தூர் மேற்கு ஒன்றியம் பைத்தூர் ஊராட்சியில் 48 மரக்கன்றுகளை ஒன்றிய செயலாளர் இரா. வரதராஜன், மாவட்ட அவைத் தலைவர் மு.ரா கருணாநிதி ஆகியோர் நட்டு வைத்தனர். இந்நிகழ்ச்சியில் பைத்தூர் ரவி, மோட்டூர் முருகன், கிருஷ்ணமூர்த்தி, சந்திரசேகரன், விஜய பாரதி, ராயப்பன், குணசேகர், ஜெயராமன், வர்மா, மோகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



தருமபுரி மேற்கு மாவட்டம் பையர்நத்தம்போதக்காடு வரை சுமார் ரூ.2.39 கோடி மதிப்பீட்டிலான தார் சாலை அமைக்கும் பணி மற்றும் ரூ.7.30 லட்சம் மதிப்பீட்டிலான பள்ளி சுற்றுசுவருடன் கூடிய நூற்றாண்டு வளைவு உள்ளிட்ட பணிகளை தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி. பழனியப்பன் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.உடன் ஒன்றிய செயலாளர் பி.எஸ்.சரவணன்,பள்ளி ஆசிரியர்கள் வெங்கடாசலம்,சாந்தி,மற்றும் சங்கர்,வா.விஜயன்,பூக்கடைவெங்கடேசன்,குறிஞ்சி வெங்கடேசன்,கதிரி.முருகன், கார்த்திக்,தினேஷ் உள்ளிட்ட திமுகவினர் பலர் கலந்து கொண்டனர்.